www.Padasalai.Net அரையாண்டு பொதுத் தேர்வு - 2022 www.CBSEtips.in

பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் :

# பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

14 x 1 = 14

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

2. வானரக் கூந்தல் முதியோள் சிறுவன் - இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) கலித்தொகை ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

3. முதல்கல் சிறுகதை உணர்த்தும் கருத்து
அ) ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்
ஆ) தனிமரம் தோப்பாகாது
இ) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் ஈ) மாற்றம் ஒன்றே மாறாதது

4. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக்கல்வெட்டுகளை கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின

5. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
அ) தனித்தமிழ்த் தந்தை - மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை சீனி வேங்கடசாமி
இ) தமிழ்த் தென்றல் - திரு.வி.க
ஈ) மொழிஞாயிறு - தேவநேயப் பாவாணர்

6. விளியறி ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

7. தோப்பில் முகம்மது மீரானின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல் எது?
அ) ஒரு குட்டித் தீவின் வரைபடம் ஆ) சாய்வு நாற்காலி
இ) கூனன் தோப்பு ஈ) துறைமுகம்

8. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் உத்தி
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

9. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை,கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

10. பொருத்துக :
அ) ஆமந்திரிகை - 1) பட்டத்துயானை
ஆ) அரசு உவா - 2) மூங்கில்
இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4) எடை அளவு
அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

11. என்னைப்போல் சிவாஜி நடிப்பார், ஆனால் என்னால்தான் சிவாஜி போல் நடிக்க முடியாது என்று கூறியவர் ______.
அ) மார்லன் பிராண்டோ ஆ) ரிச்சர்ட் பர்ட்டன்
இ) ஓமர் ஷெரிப் ஈ) ராஜ்கபூர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

12. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக்குறிப்பு
அ) உம்மைத் தொகை ஆ) பண்புத் தொகை
இ) வினைத் தொகை ஈ) உவமைத் தொகை
13. ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்
14. தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும் நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
17. அறிவுடை வேந்தன் நெறிகுறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?
18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. புக்கில், தன் மனை குறிப்பு வரைக.
20. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.
21. ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியின் வகைகளைக் கூறு.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சுக்கோ
ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தயை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக : கலை, களை, கழை
24. பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க : தின்மை - திண்மை
25. உவமைத் தொடர்களை சொற்றொடரில் அமைத்திடுக.
அ) அச்சாணி இல்லாத தேர் போல ஆ) நகமும் சதையும் போல
26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : அ) பேசுவார் ஆ) அமர்ந்தனன்
27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக : அ) முன்னுடை ஆ) செந்தமிழ்
28. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
29. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) பனைமட்டையால் கூரை வைத்திருந்தனர்
அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும், யானைக் குட்டியும் கண்டேன்
30. கலைச்சொல் தருக : அ) Subscription ஆ) Biblography

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. யானை புக்க புலம் போலத் தானும்
உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும், பொருளையும் பொருத்தி எழுதுக.
32. செம்பரிதி மலைமேட்டில் தலையைச்
சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம்
வானமெல்லாம் - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

34. ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர் மின் - இடம் சுட்டி பொருள் விளக்குக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்குக.

36. கலை முழுமை என்றால் என்ன? விளக்குக.

37. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

38. மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்கு செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

40. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக :

பூமிச்சருகாம் பாலையை
முத்து பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன் - இப்பாடலில் இடம் பெற்ற நயங்களை எடுத்தெழுதுக.

42. அம்மூவனார் தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு அமைத்து எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம்பெயரா (அல்லது) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

பகுதி - IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 x 6 = 18

44. அ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்துவ கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைத்தாசணாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக.

46. அ) சாலை விபத்தில்லா தமிழ்நாடு - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

(அல்லது)

அ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்கு பொருத்தமானதே என்பதை நிறுவுக.

பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

47. அ) "விண்வேறு" எனத் தொடங்கும் இதில் வெற்றிபெறப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "செயல்" என முடியும் திருக்குறளை எழுதுக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com